SOND

இணைவோம். செயற்படுவோம். புதிய சமூகத்தினை உருவாக்குவோம்.

T.P:- 077-3314262 E-Mail:-senthu@eureka.lk web:-www.sond.lk

# மாதாந்த அறிக்கை

மார்கழி, 2012.

## Social Organizations Networking for Development

RKM Road
Akkaraipattu

No. 19, Saravana Road
Kallady Batticaloa.

60" Arasady Road
Jaffna.

## இதழின் உள்ளே

1.யாழ்
2.அம்பாறை
3.மட்டக்களப்பு ஆகிய மூன்று மாவட்டங்களினுடைய செயற்பாடுகள்

SOND

# Mine Risk Education

## மிதிவெடி அபாயக்கல்வி செயற்திட்டம்

**Mine Risk Education Project** புதிய திட்டம் தொடர்பான கலந்துரையாடல் 29.12.2012 அன்று பணிப்பாளர் தலமையில் **SOND** அலுவலகத்தில் நடைபெற்றது இதில் **Unicef** பிரதிநிதி திரு வசந்தகுமார் அவர்களும் திட்ட பணியாளர்களும் கலந்துகொண்டனர்.

## Homestead Garden Project
## வீட்டுத்தோட்ட வருமானம் தரும் திட்டம்

05.12.2012 அன்று பணிப்பாளரினால் தந்தை செல்வாபுரம், வித்தகபுரம் கிராமங்களுக் களவிஜயம் மேற் கொள்ளப்பட்டது.

16.12.2012 அன்று தந்தை செல்வாபுரம் , மாவட்டபுரம் , வித்தகபுரம், மாவட்புரம் தெற்கு , நகுலேஸ்வரம், கூவில் ஆகிய குழுத் தலைவர்களுடனான சந்திப்பு எமது அமைப்பின் பணிப்பாளருடன் நடைபெற்றது.

இத் திட்டத்தின் 6 கிராமங்களைச் சேர்ந்த 500 பயனாளிகளுக்கு 1500 அன்னாசிக்கன்று , 500 பப்பாசிக்கன்று , கத்தரி நாற்று 2000 , மிளகாய் நாற்று , 2000 தக்காளி நாற்று 2000 வழங்கப்பட்டது.

மேலும் இத்திட்டத்தின் சிறந்த செயற்பாட்டாளர்களுக்கு கீழ்வரும் மூலிகைச் செடிகள் வழங்கப்பட்டது. கண்டங்கத்தரி , மஞ்சள் சித்தரத்தை , திப்பிலி, அமுக்குறா , புதினா , எழுமிச்சை, ஓமவல்லி , போன்றன.

**Country Manager** ராஜன் , கமலநாதன் , பணிப்பாளர்,ஆகியோரினால் நகுலேஸ், கூவில் மாவட்புரம் தெற்கு ,வித்தகபுரம் ஆகிய கிராமங்களில் களவிஜயம் மேற்கொள்ளப்பட்டது.





# Non State Actors in Development Project அரசசாரா செயற்பாட்டாளர்களின் அபிவிருத்தி செயற்திட்டம்

இத் திட்டத்தின் கீழ் நடைபெற்ற கலந்துரையாடல்களின் விபரம் கீழ்வருமாறு

| இ | திகதி | கலந்துரையாடல் | கலந்து கொண்டவர் வி |
|---|---|---|---|
| | 6.12.2012 | தொழில் வழிகாட்டல் ஆலோசனைக் கலந்துரையாடல் | 8 |
| | 7.12.2012 | NSA ,IED Project Staff உடனான கலந்துரையாடல் | 15 |
| | 7.12.2012 | NSA திட்டத்தின் கடந்த கால செயற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல் | 49 |





சர்வதேச மனித உரிமை தினம், பெண்களுக்கு எதிரான வன்முறை எதிர்ப்பு வாரம்

11.12.2012 திகதி செவ்வாய் கிழமை காலை 09.00 மணி தொடக்கம் மாலை 04.00 மணி வரை நல்லூர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நல்லூர் பிரதேச செயலகமும் SOND நிறுவனமும் இணைந்து நடாத்திய சர்வதேச மனித உரிமை தினம் ,பெண்களுக்கு எதிரான வன்முறை எதிர்ப்பு வாரம் ஆகியன தொடர்பான நிகழ்வு நடைபெற்றபோது நூற்றுக்கணக்கானோர் கலந்துகொண்டனர்.

பிரதேச செயலாளர் தலைமையில் நடைபெற்ற வைபவத்தில் திட்டமிடல் பிரதி பணிப்பாளர் சொன்ட் நிறுவனத் தலைவர் திரு.ச.செந்துராசா ஆகியோர் உரையைத் தொடர்ந்து பிரதேச செயலக பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் செல்வி.ந.உதயனி அவர்கள் "பெண்களுக்கெதிரான வன்முறைகளும் அவை தொடர்பான பாதுகாப்பும்" என்ற தலைப்பிலான விளக்கத்தினை வழங்கினார்.

இரண்டாவது நிகழ்வாக திரு.மு.றெமிடியஸ் சட்டதரணி ,யாழ்ப்பாணம் அவர்கள் மனித உரிமைகளும், பெண்கள் உரிமைகளும் என்ற தலைப்பில் கருத்துரையுடன் விளக்கமளித்தார்.




# Non State Actors in Development Project அரசசாரா செயற்பாட்டாளர்களின் அபிவிருத்தி செயற்திட்டம்

## சர்வதேச மனித உரிமை தினம், பெண்களுக்கு எதிரான வன்முறை எதிர்ப்பு வாரம்

24.12.2012 திகதி திங்கள் J/109 சங்கிலியன்தோப்பு WRDS இனால் மூத்த விநாயகர் சனசமூக நிலைய மண்டபத்தில் சர்வதேச மனித உரிமைகள் தின நிகழ்வு நடைபெற்றது. இதில் நல்லூர் பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர். கிராம உத்தியோகத்தர், மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இணைப்பாளர்,சட்டதரணியுமான திரு.கனகராஜ் அவர்கள் விழுது நிறுவன உத்தியோகத்தர்,SOND நிறுவன EU NSA திட்ட களப்பணியாளர், மாதர் கிராம அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள் பொது மக்கள் உட்பட 60 பேர் பங்குபற்றினார்கள்.






## வாழ்வாதாரக்கடன் வழங்கும் நிகழ்வு

11.12.2012 திகதி செவ்வாய்கிழமை காலை 10.00மணி -12.00 மணிவரை J/109 சங்கிலியன்தோப்பு WRDS இனால் ஒழுங்கு செய்யப்பட்ட பிரதேச அபிவிருத்தி வங்கியின் வாழ்வாதாரக்கடன் வழங்கும் நிகழ்வு மூத்த விநாயகர் சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெற்றது. இதில் 90 பயனாளிகள் பங்கு பற்றி பயனடைந்தனர். ஒவ்வொரு பயனாளிக்கும் 50,000/=ரூபா பணம் வழங்கப்பட்டது.

## பிரதேச அபிவிருத்தி திட்டம் வழங்குதல்

28.12.2012 திகதி வெள்ளிக்கிழமை எம்மால் தயாரிக்கப்பட்ட பிரதேச அபிவிருத்தி திட்டம் -2013 ஐ யாழ்ப்பாணம் பிரதேச செயலர் ,யாழ் மாநகர சபை முதல்வர் ,நல்லூர் பிரதேச செயலர்,நல்லூர் பிரதேச சபை தவிசாளர் ,கோப்பாய் பிரதேச செயலர்,புத்தூர் பிரதேச சபை தவிசாளர், மானிப்பாய் பிரதேச சபை தவிசாளர்,சுழிபுரம் பிரதேச சபை தவிசாளர்,சண்டிலிப்பாய் பிரதேச செயலர்,சங்கானை பிரதேச செயலர் ஆகியோர்களுக்கு கையளிக்கப்பட்டது.





SOND

## Inclusive Economic Development (IED) -
## ஒருங்கிணைந்த பொருளாதார அபிவிருத்தித்திட்டம்

இந்த மாதம் யாழ் மாவட்டத்தில் பரீட்சாத்தமான முறையில் அன்னாசி பழச்செய்கையை மேற்கொள்ளும் பொருட்டு **IED** திட்ட பயனாளிகள் 86 பேருக்கு 500 அன்னாசி நாற்றுக்கள் வழங்கி அவற்றுக்கான நடுகை பராமரிப்பு விடயங்களை உள்ளடக்கிய பயிற்சியும் பிரசுரமும் வழங்கி இந்த செயற்பாடு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கடந்த 07.12.2012 திகதி **Mr. GORDON SHANNON (HEAD OF THE CHRSTIAN AID PROGRAMME FUNDING ASIA)** அவர்கள் யாழ்சக்தி நிலையம் மற்றும் வாழைச் செய்கையில் ஈடுபட்ட பயனாளிகளின் இடத்துக்கும் விஜயம் செய்து கருத்துக்களை பரிமாறிக் கொண்டதுடன் **IED** பணியாளர்களுக்கும் இத்திட்டம் தொடர்பான விளக்கமும் ஆலோசனைகளையும் வழங்கினார்.

12.12.2012. திகதி கிறிடியன் எயிட் நிறுவன இலங்கை முகாமையாளர் திரு ராஜன் அவர்கள் **SOND** அலுவலகம் வந்து **IED** பணியாளர்களுடன் கலந்துரையாடி இத்திட்டத்தை முன்னெடுப்பது தொடர்பான ஆலோசனைகளையும் வழங்கியதுடன் யாழ் சக்தி உற்பத்தி நிலையத்தையும் சென்று பார்வையிட்டு சந்தை வாய்ப்பை உறுதிப்படுத்தி அதன் உற்பத்தியை பெருக்குமாறு அறிவுரை வழங்கினார். அத்துடன் தேசிய அளவில் நடாத்த திட்டமிடப்பட்ட **PMSD** பயிற்சி நிகழ்வின் செயற்பாடு பற்றி கலந்துரையாடப்பட்டு முடிவுகள் எடுக்கப்பட்டது.

# அம்பாறை மாவட்டத்தின் செயற்பாடுகளுடைய விபரம்

**எதிர்காலத்தில் சிறந்த சூழலை உருவாக்கிக்கொள்வதற்கு உகந்த சமூகத்தினை கட்டியெழுப்புதல்.(Create a conducive Society for Good Environment for the Future).**

**மரக்கன்றுகள் வழங்குதல்.**

**"பகுப்பாய்வு அடிப்படையில் சமூகத்தேவைகளை வெளிக்கொண்டுவருவதற்கான கூட்டுச்செயற்பாடுகளுக்கு உதவிசெய்தல்" எனும் உப செயற்பாட்டின் கீழ் Diakonia அமைப்பின் மூலம் உதவிபெறும் அம்பாறை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் செயற்பட்டுவரும் நிறுவனங்களுக்கு சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்காக அக்கரைப்பற்று வன வள திணைக்களத்தினூடாக மரக்கன்றுகள் வழங்கப்பட்டது. அதனடிப்படையில் அக்கரைப்பற்று SOND அமைப்பிற்கு வழங்கப்பட்ட 137 மரக்கன்றுகள் கண்ணகி பட்டிமேடு ஆலயம் மற்றும் அக்கரைப்பற்று மெதடிஸ் தேவாலயம் ஆகிய இடங்களுக்கு பிரித்து வழங்கப்பட்டது.**

## நடப்பட்ட மரக்கன்றுகள் கண்காணிப்பு

**"சூழல் பாதுகாப்பு மற்றும் காலநிலை மாற்றம் ஆகியவற்றிற்கான பிரசாரங்களை பாடசாலை மாணவர்களுக்கு வழங்குதல்" எனும் உப செயற்பாட்டின் கீழ் அக்கரைப்பற்று அல் பதுார் பாடசாலை மற்றும் ஆலையடிவேம்பு திருநாவற்கரசு வித்தியாலயம் ஆகிய இடங்களில் நாட்டப்பட்டு பராமரிக்கப்பட்டுவரும் மரக்கன்றுகளைக் கண்காணிக்கும் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டுவருகின்றது.**







## பாலர் பாடசாலை

ஆசிரியரினுடைய மாதாந்த செயற்பாட்டினை அறியும் பொருட்டு ஒவ்வொரு மாதமும் பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் எமது அலுவலகத்தில் நடாத்தப்பட்டு வருகின்றது. இதனடிப்படையில் 2012.12.12 ஆம் திகதி அன்று காலை 10.30 மணிக்கு SOND அமைப்பின் பணியாளரான தி.ஜெனிதா அவர்களின் தலைமையில் SOND மண்டபத்தில் நடாத்தப்பட்டது. இக்கலந்துரையாடலில் 14 முன்பள்ளியைச் சேர்ந்த 25 ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.



SOND

# நிதியின்றிய செயற்திட்டங்கள்

அரச சார்பற்ற நிறுவனமென்றால் அது நிதியோடுதான் செயற்படும் என்ற மாயை கற்றவரிடையே கூட உள்ளது. இக் கருத்தினை மாற்றி நிதியின்றி சிலரின் நேரத்தையும் எமது வளத்தையும் பயன்படுத்திச் செய்யப்படும் கீழ்வரும் செயற்திட்டங்கள் இவற்றிற்கு நல் உதாரணங்களாகும்.

## சிறுவர் திட்டம்

சிறுவர் மேம்பாட்டினை மையமாகக் கொண்டு சிறுவர் செயற்திட்டம் எமது அமைப்பின் கீழ் நடைமுறைப்படுத்திவருகின்றது. இச் செயற்பாட்டில் ஆலையடிவேம்பு, அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட மூவினத்தினையும் சேர்ந்த 18 ஆண், 22 பெண் உள்ளடங்கலாக 40 சிறுவர்கள் இச் செயற்பாட்டில் இணைந்துள்ளார்கள்.

### கலந்துரையாடல்கள்.

இம் மாதம் காந்தி கழக சிறுவர்களுக்கு ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் காலை 11.00 மணிக்கு பணியாளரான தி.ஜெனிதா அவர்களினால் SOND பயிற்சி மண்டபத்தில் 5 கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டுள்ளது. இக்கலந்துரையாடலின் போது 3 அறிவூட்டும் திரைப்படக்காட்சிகளும் காண்பிக்கப்பட்டுள்ளது.

### சிறுவர்களினால் மேற்கொள்ளப்பட்ட விசேட செயற்பாடுகள்.

01. இம் மாதம் 11,25 ஆகிய திகதிகளில் காந்தி கழக சிறுவர்களுக்கு 04 சிங்கள மொழி கற்பித்தல் வகுப்பானது கழக உறுப்பினர் சனத்தினால் நடாத்தப்பட்டது.

### SOND அமைப்பினால் மேற்கொள்ளப்பட்ட விசேட செயற்பாடுகள்.

01. காந்தி கழக சிறுவர்களுக்கு நான்கு கணனி வகுப்புக்கள் SOND பணியாளரான ஜெனிதா அவர்களினால் நடாத்தப்பட்டது.

02. காந்தி கழக சிறுவர்களுக்கு மூன்று ஆங்கில வகுப்புக்கள் SOND பணியாளரான சுரேஸ்குமார் அவர்களினால் நடாத்தப்பட்டது.





SOND

## கணனிப் பயன்பாடு

சமூகத்தில் உள்ள இளையோர், சிறுவர்களுடைய கணனி அறிவினை அதிகரிக்கும் நோக்கத்தில் எமது அலுவலகத்தில் இலவச கணனி செயல்முறை வகுப்புக்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இதனடிப்படையில் இம்மாதம் 12 சிறுவர்களினால் 24 தடவைகள் கணனிப்பாவனை பயன்படுத்தப்பட்டுள்ளது.





## தகவல் வளநிலையம்

சமூகத்தில் வாசிப்புத் திறனை அதிகரிக்கும் பொருட்டு எமது அமைப்பில் மக்களுக்கான நூலக சேவை செய்யப்பட்டு வருகின்றது. இதனடிப்படையில் இம்மாதம் சிறுவர், இளையோர், நிறுவனப் பணியாளர்கள், SOND பணியாளர்கள்,அரசாங்க ஊழியர்கள் ஆகியோர் இம்மாதம் 7 தலைப்பில் 145 புத்தகங்களை பயன்படுத்தியுள்ளார்கள்.

# SOND மட்டக்களப்பு மாவட்டத்தின் செயற்பாட்டுகளுடைய விபரம்

எதிர்காலத்தல் சிறந்த சூழலை உருவாக்கிக்கொள்வதற்கு உகந்த சமூகத்தினை கட்டியெழுப்புதல் .(**Create a conducive Society for Good Environment for the Future).**

காலநிலைமாற்றமும் சூழல் பாதுகாப்பும் **(Climate Change & Environmental protection )**

மேற்படி செயற்பாட்டின் கீழ் இம்மாதம் வழமைபோன்று மரக்கன்றுகளை பராமரிப்பு வேலைகள் செய்யப்பட்டுள்ளது. குறிப்பாக 100 மரங்களுக்கும் யுரியா பசளை இடப்பட்டது. அத்துடன் ஆரையம்பதி பிரதேச சபை பிரிவிலும் 45 மரங்கள் நடுவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டு வருகின்றது.

பெண்கள் மற்றும் விவசாய குழுக்களின் முகாமைத்துவ கொள்ளளவினை கட்டியெழுப்புதல் **Management Capacity building for farmers & women groups**

ஆரையம்பதி பிரதேச செயலாளர் பிரிவு, மற்றும் மண்முனை வடக்கு பிரதேச செயலாளர், ஏறாவூர் நகர் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட ஆரையம்பதி கிழக்கு செல்வாநகர், கல்லடி வேலூர், ஏறாவூர்-6 கிராமங்களில் இயங்கி வரும் தாய்மார் சங்கத்திற்கு வழங்கப்பட்ட பயிற்சி, கலந்துரையாடலின் மூலம் இச்சங்கங்களில் கீழ்வரும் முன்றேற்றங்கள் அவதானிக்கமுடிகின்றது

- மாதாந்தம் கலந்துரையாடல் நடாத்துதல்
- அறிக்கைகள் சிறப்பாக எழுதுதல்
- சுயதொழிலுக்கு கடன் கொடுக்கப்பட்ட பயனாளிகளின் வீடுகளுக்கு மாதாந்தம் சென்று கடன் அறவீடு செய்தல்
- அறவீடு செய்த பணத்தினை ஒழுங்காக வங்கியில் வைப்பில் இடல்
- ஆவணங்களை பாதுகாத்தல்
- புதிய அங்கத்தவர்களை சேர்த்தல்.

ஏறாவூர் பெண்கள் அமைப்பின் நிர்வாக கலந்துரையாடல் 08.12.2012ந் திகதி செயலாளர் அவர்களின் வீட்டில் தலைவி **A.L.S** அம்றா அவர்களின் தலைமையில் இடம்பெற்றது. இக்கலந்துரையாடலுக்கு ஏறாவூர் நகர் பிரதேச செயலக **WDO** அவர்களும் 6 நிர்வாக உத்தியோகத்தர் அவர்களும் கலந்து கொண்டனர். கலந்துரையாடப்பட்ட விடயங்கள்.

SOND

## மாதிரி பண்ணை அமைத்தல்

மண்டபத்தடி கமநல கேந்திர நிலையத்தின் கீழ் இயங்கிவரும் 25 விவசாய அமைப்புகளில் வாதக்கல்மடு கமநல அமைப்பினை மாதிரி விவசாயப்பண்ணை செய்வதற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளது. அந்தவகையில் திரு குணரெட்ணம் அவர்களுக்கு ஜம்பதாயிரம் ரூபா பணம் வழங்கப்பட்டது அதனைக்கொண்டு தனது பங்களிப்புடன் பயிரினங்கள் நடப்பட்டுள்ளது. இப்பண்ணையில் கோழி, மற்றும் முந்திரிகை மா,பலா,வாழை ,முருங்கை மரங்களும் மரக்கறி பயிர்களும் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும்

## மக்கள் பங்களிப்புடன் இயற்கை வளங்களை பாதுகாத்தல்

## (Support for community based natural resource management in 2 villages).

பெரிய உப்போடை பிரதேசத்தில் நடைமுறைப்படுத்தும் திட்டத்தில் கீழ் மூன்று கிராமங்களின் தலைவர்களையும் குழு உறுப்பினர்களையும் சந்தித்து வீட்டுத் தோட்டம் அமைத்தலும் அதனைப் பராமரித்தலுக்குமான திட்டமிடல் கலந்துரையாடல் நிறைவுபெற்று அவர்களுக்குரிய பயிர்கன்றுகள் மற்றும் விதையினங்கள் கடந்தமாதம் வழங்கப்பட்டதுடன் பயிற்சிகளும் வழங்கப்பட்டது.





இதனைத்தொடந்து 3 கிராமங்களிலிருந்தும் கண்டி சமாதான அமைப்பினருடன் இணைந்து சமாதான வேலைத்திட்டத்தில் இணைந்துகொண்டவர்களுடனான நல்லுறவிற்க்கான கலந்துரையாடல் 09.12.2012 அன்று சீலாமுனைக்கிராமத்தில் இடம்பெற்றது. இதில் சமாதான அமைப்பின் தலைவர் மற்றும் உத்தியோகஸ்தர்கள் கலந்துகொண்டனர். இக்கலந்துரையாடலில் 3 கிராமங்களுக்குமான வேலைத்திட்டம் ஒன்றினை தயாரிப்பதாக முடிவெடுக்கப்பட்டது.

SOND

## வீட்டுத்தோட்ட ஊக்குவிப்பு திட்டம்.

எமது சொண்ட் நிறுவனம் கிறிஸ்ரியன் எயிட் (**Christen Aid** ) நிறுவனத்தின் அனுசரணையுடன் மட்டக்களப்பு மாவட்டத்தின் பட்டடிப்பளை பிரதேசசெயலாளர் பிரிவிலுள்ள 4 கிராமசேவகர் பிரிவுகளில் இயற்கை வீட்டுத்தோட்ட முறைமையினை மக்களிடையே அறிமுகப்படுத்துவதன் மூலம் உணவு பாதுகாப்பு நடவடிக்கையில் மக்களை ஈடுபடுத்தும் வகையில் 300 பயனாளிகளை கிராமத்திற்கு 100 பேர் என்ற அடிப்படையில் தெரிவுசெய்து வீட்டுத்தோட்டம் தொடர்பான திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. இத்திட்டத்தின் மூலம் தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கு இம்மாதம் அன்னாசி மற்றும் குறிஞ்சாக்கன்றுகள் 25.26 .12.2012 வழங்கப்பட்டது.

30 சிறந்த விவசாயிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்களது வீட்டுத்தோட்டம் பார்வையிடப்பட்டதுடன் அவர்களது பதிவுகளை மேற்கொள்வதற்கான புத்தகங்கள் வழங்கப்பட்டது. குறிப்பாக இவ்விவசாயிகள் தோட்டச்செய்கை தொடர்பில் ஆய்வுக்குட்படுத்தப்படுவதற்காக உள்ளனர்.





## காணிதொடர்பிலான ஆவணங்களை ஆவணப்படுத்தல் ஊடாக முரண்பாட்டினை குறைத்தல் **(Conflict mitigation through land documentation)**

மேற்படி தொனிபொருளிலான வேலைத்திட்டம் **USAID** அமைப்புடன் சொண்ட் இணைந்து மட்டக்களப்பு மாவட்ட காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் கொள்திறனை விருத்தி செய்வதுடன் காணிகளை மக்கள் சட்டபூர்வமாக ஆக்கிக்கொள்வதற்கான விழிப்புணர்வினை ஏற்படுத்தும் நோக்கில் மட்டக்களப்பின் 14 பிரதேச செயலகப்பிரிவில் உள்ள அனைத்து கிராம சேவகர்களுக்கும் முதற்கட்டமாக விழிப்புணர்வு, கருத்தரங்கு இடம்பெற ஏற்படுகள் செய்யப்பட்டுள்ளது.

SOND

# வளநிலைய பயன்பாடு

சொண்ட அமைப்பானது மக்களின் வாசிப்பு திறன் மற்றும் அனைவருக்கும் கணனி அறிவு ஆகிய நோக்கங்களின் அடிப்படையில் இலவச நூலக சேவை மற்றும் இலவச கணனி சேவைகளை நடைமுறைப்படுத்தி வருகின்றது. இந்த நிலையில் வள நிலையம் மூலமாக மார்கழி மாதம் பயன் அடைந்தவர்களின் விபரம் மற்றும் தகவல்கள் பின்வருமாறு இதனடிப்படையில் 14 சிறுவர்கள் எமது கணணியை பயன்படுத்தியுள்ளார்கள்





## தொலைநோக்கு

“புதிய சமூகம் உருவாக்குவோம்”

## பணிநோக்கு

.சமூகத்தில் உள்ள சகல தரப்பினரையும் நிறுவனங்களுக்கும் உதவி வழிகாட்டி சமூக மாற்றத்தின் வேலைத்திட்டங்களில் வலுவூட்டிப் பங்காளிகளாக்கி சமூக மாற்றச் செயற்பாடுகளில் பங்கு கொள்ளவைத்தல்.

